1983 மார்ச்சு 4]

[பிற்பகல் 1 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவசர சட்டம் இன்றைக்கு காலாவதி ஆகிறது; ஆகவே அவசரமாகக் கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டால் பிரச்னை தீர்ந்து விடும். உறுப்பினர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, விதி 181-ன் படி..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு வேண்டாம். இது பற்றி பேசி விட்டு பிறகு எடுத்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 5—3—1983 காலை 11 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

165. சென்னை பெருநகர்ப் பகுதி எஸ். 1 (பகுதி)-ஆம் எண்ணுள்ள பாலவாக்கம் கிராமத்திற்கான பெரும் திட்டத்தில் மாற்றங்கள் செய்வது சம்பந்தமான வீட்டு வசதி-நகர் வளர்ச்சித் துறையின் 20—7—1982-ஆம் தேதியிடப்பெற்ற 656-ஆம் எண்: அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகரத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

1883 மார்ச் 7]

166. தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது சம்பந்தமாக, தொழிலாளர் நல-வேலைவாய்ப்புத் துறையின் 14—9—1982-ஆம் தேதியிடப் பெற்ற 1933-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

167. தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு கருப்பஞ்சாறு கட்டுப்பாடு-ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது சம்பந்தமாக, மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 30—10—1982-ஆம் தேதியிடப்பெற்ற 765-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

ஏதுவுமில்லை.